## இரத்தினபுரி பிரதேச சபை
## இரத்தினபுரி மாவட்டம்

### 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 11 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மே 04 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஜனவரி 28 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, இரத்தினபுரி பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இரத்தினபுரி பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின்போது முன்னைய ஆண்டுகளுக்குரிய முத்திரைக் கட்டணமாகிய ரூபா 8,222,392 பெறப்பட்டிருந்தது. அக் கணக்கின் ஆரம்ப மீதியாகிய ரூபா 6,917,491 மாத்திரமே காட்டப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 1,304,901 முத்திரைக் கட்டணம் அக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், அது மீளாய்வாண்டின் வருவாயாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) சம்பள மீளளிப்புப் பதிவேட்டின்படி மீளாய்வாண்டில் விலைப்பட்டியலிடப்பட்ட தொகை ரூபா 8,014,349 ஆகும். இது பேரேட்டுக் கணக்கில் ரூபா 6,822,571 ஆகக் காட்டப்பட்டமையால் அப் பெறுமதியில் ரூபா 1,191,778 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) ஆண்டிற்கான விலைப்பட்டியலிடப்பட்ட தேயிலைக் கொழுந்தின் தொகை தொகை ரூபா 398,768 ஆகும். எனினும், அப்பேரேட்டுக் கணக்கிள் பிரகாரம் ரூபா 413,078 காட்டப்பட்டமையால் விலையிடப்பட்ட தொகையில் ரூபா 14,310 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதான காசேட்டு மீதி ரூபா 6,590,678 ஆகும். எனினும், நிதிசார் கூற்றுக்களில் அம் மீதி ரூபா 6,947,215 ஆகியமையால் அம் மீதியில் ரூபா 356,537 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) பேரேட்டுக் கணக்கின் 5 கணக்கீட்டு விடயங்களது மீதிகளும் உப பதிவேட்டில் அவற்றினது மீதிகளும் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டபோது முறையே 3 வருவாய் விடங்களும் 2 பொறுப்பு விடயங்களும் ரூபா 12,942,884 மற்றும் ரூபா 3,940,751 வேறுபாடுகளுடன் இருப்பது அவதானிகக்ப்பட்டது.

(ஊ) தலைவரால் பெறப்பட்ட ரூபா 200,000 முற்பணம் மீளாய்வாண்டினது கடன்கொடுத்தோர் கணக்கிலிடப்பட்டமையால் கடன்கொடுத்தோர் தொகை அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது

(எ) நிர்மாண வேலைகள் நான்கிற்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 263,848 முற்பணம் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கிலிடப்பட்டமையால் கடன்கொடுத்தோர் மீதி அதேயளவு அதிகரித்திருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,192,314 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 12,207,258 ஆகும்.

**2.2 வருவாய் நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன**

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளபடியான வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | - | 24 | 27 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | 445 | - |

**2.2.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 6,257,250 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 12,949,534 |

**2.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப்பயன்படுத்தப்படுவதுமான பௌதீக வளங்கள்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 73,977 வரவு மீதியானது 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட செயற்பாடற்ற கணக்கு மீதி என அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 64,963 பெறுமதியான 4 கணக்கீட்டு மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2012 மே 24 ஆந் திகதியன்று ரூபா 247,000 செலவிட்டு பீரீமிக்ஸ் செயற்திட்டத்திற்கு 26 கியூப் மணல் கொள்வனவு செய்யப்பட்டபோதும், கணக்காய்வுத் தினமான 2013 செப்தெம்பர் 10 ஆந் திகதியளவில் ஓராண்டும் 3 மாதங்களும் கடந்த நிலையிலும் சபை வளாகத்தில் அக்கையிருப்பு பயன்படுத்தப்படாதிருந்தது.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) சப்ரகமுவ மாகாண சபைத் தலைமைச் செயலாளரது 2010 நொவம்பர் 16 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்கச் சுற்றறிக்கைப் பிரகாரம் சகல உள்ளூராட்சி நிறுவன வெற்றிடங்களும் நிரப்பபப்ட்டுள்ளதால் பிரதான அமைச்சின் செயலாளரது அங்கீகாரமின்றி எந்த ஆட் சேர்ப்பும் மேற்கொள்ளப்படலாகாது. எனினும், சபையின் நிதியிலிருந்து படி வழங்குவதற்கு வெற்றிடமாகிய பதவிக்கு சேவை உடன்படிக்கையின் மூலம் ஆட்சேர்ப்பதற்கு பிரதான அமைச்சினது செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், எவ்வித அங்கீகாரமின்றி 10 நபர்கள் சேவை உடன்படிக்கை மூலம் ஆட்சேர்க்கப்பட்டு அவர்களுக்குச் மீளாய்வாண்டின் போது ரூபா 1,032,454 சம்பளத்திற்கென செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) பிரிவிற்கு முரணாக அமைச்சரின் முன் கூட்டிய அங்கீகாரமின்றி 2012 ஜனவரி 05 மற்றும் 2012 பெப்ரவரி 28 ஆந் திகதிய சபைத் தீர்மானங்களின் பிரகாரம் ரூபா ரூபா 18,000 கூட்டுத்தொகை தர்ம மற்றும் நலன்புரி பணிகளுக்குச் செலவிடப்பட்டிருந்ததுடன் 2012 டிசெம்பர் 31 அன்று ரூபா 1,450,500 செலவில் 15 தகரக் கூடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு தர்ம மற்றும் நலன்புரி நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டுமிருந்தன.

(இ) 2002 ஏப்ரல் 30 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் பபாகொஏ/03/(1) இலக்கக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு ஹியூப் குழாய்களைக் கொள்வனவு செய்கையில் அவை பலவின்ன கொங்கீரீட் தொழிற்சாலையிலிருந்து பெறப்பட வேண்டுமாயினும், அது கருத்திற் கொள்ளப்படாது கொள்வனவு வழிகாட்டலுக்கு அமையாதது தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து ரூபா 577,500 க்கான ஹ0யூப் குழல்கள் 2012 பெப்ரவரி 27 அன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 12 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,110,000 நிதி செலவிடப்படவில்லை

(ஆ) மீளாய்வாண்டிற்காகன நிதியேற்பாடு ஏறக்குறைய 35 சந்தர்ப்பங்களில் எஞ்சியிருந்தன. அது ஏறக்குறைய ரூபா 6,897,508 என அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 331,390 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 150 வீதி விளக்குகள் கையிருப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை.

(ஈ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 371 க்கமைய ரூபா 60,048 முற்பணமானது 2013 செப்தெம்பர் 10 ஆந் திகதியளவில் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கையின் இருந்தது.

(உ) இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய விசேட வர்த்தகமானியின் V ஆம் பட்டோலையின் பிரகாரம் தொலைபேசிக் கோபுரக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) வருவாய் நிர்வாகம்